# August 6, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தமிழகத்தின் மாநில விலங்கான நீலகிரி வரையாடுகளைப் பாதுகாப்பதற்காக, கடந்த 2023-இல் முதல்வர் மு.க.ஸ்டாலினால், நீலகிரி வரையாடு திட்டம் தொடங்கப்பட்டது.
   i. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழகத்தில் உள்ள 177 வரையாடு வாழ்விட பகுதிகளில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. நிகழ் ஆண்டில் கொடைக்கானல் வனக்கோட்டம் உள்பட 36 பகுதிகள் கூடுதலாக கணக்கெடுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.
   ii. கணக்கெடுப்பின்படி, தமிழகத்தில் நீலகிரி வரையாடுகளின் மொத்த எண்ணிக்கை 1,303. இதில் 42 சதவீ தம் ஆனைமலை புலிகள் காப்பகம் பகுதியில் உள்ளன. இதேபோல கிராஸ் ஹில்ஸ் தேசிய பூங்கா மற்றும் முக்கூர்த்தி தேசிய பூங்காவில் அதிக எண்ணிக்கையில் நீலகிரி வரையாடுகள் உள்ளன.
2. 3,000 முதல் 5,500 கி.மீ. தொலைவுவரை அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லும் திறன் கொண்ட இடைநிலை-தொலைதூர (இன்டர்மீடியட்) வகை ஏவுகணைகளை தயார் நிலையில் நிறுத்திவைக்க தாங்கள் சுயமாக விதித்திருந்த தடையை விலக்கிக்கொண்டுள்ளதாக ரஷியா அறிவித்துள்ளது.
   i. 2026 முதல் ஜெர்மனியில் டைஃபூன் மற்றும் டார்க்ஈகிள் ஏவுகணைகளை அமெரிக்கா நிறுத்த திட்டமிட்டுள்ளது. இவை ரஷியாவுக்கு நேரடி அச்சுறுத்தலாகவும், பிராந்திய மற்றும் உலகளாவிய ஸ்திரத்தன்மைக்கு தீங்கு விளைவிப்பதாகவும் உள்ளதாக ரஷியா கூறுகிறது.
   ii. இதற்கு பதிலளிக்கும் வகையில், ஒலியைப் போல் 10 மடங்குக்கும் அதிக வேகத்தில் பாயக்கூடிய, உலகின் அதிநவீன வான்பாதுகாப்பு ஏவுகணைகளாலும் இடைமறித்து அழிக்க முடியாது என்று கூறப்படும் ஓரெஷ்னிக் ஏவுகணைகளை பெலாரஸில் நிறுத்த ரஷியா முடிவு செய்துள்ளது.
3. இந்தியாவுக்கு அரசு முறைப்பயணம் மேற்கொண்டுள்ள பிலிப்பின்ஸ் அதிபர் ஃபெர்டினாண்ட் ஆர் மார்கோஸ் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து ஆலோசனை நடத்தினார். அதன்பிறகு இருநாடுகளிடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில் 14 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன.
4. முன்னாள் மத்திய உள் துறை அமைச்சருமான எல்.கே.அத் வானியின் பதவிக் காலத்தை விஞ்சி, நாட்டின் நீண்டகால உள்துறை அமைச்சர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார் அமித் ஷா.
   i. மத்திய உள்துறை அமைச்சர் பதவியில் 2,258 நாள்களை அமித் ஷா நிறைவு செய்து, எல்.கே.அத் வானியின் 2,256 பதவி நாள்களை கடந்துள்ளார். (ஜி.பி.பண்ட் – 2249 நாட்கள்)
5. உத்தரகண்ட் மாநிலம், உத்தரகாசியில் மேகவெடிப்பால் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதில் தராலி கிராமம் நிலச்சரிவில் புதைந்தது.
6. திருநங்கையருக்கான சமூக பாதுகாப்பு கொள்கையை வெளியிட்ட ஏழாவது மாநிலம் தமிழகம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது. இதற்காக தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் பாராட்டு தெரிவித்தது.
7. மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அடுத்த 6 மாதங்களுக்கு நீட்டிக்கும் தீர்மானம், மாநிலங்களவையில் கடும் அமளிக்கு இடையே நிறைவேற்றப்பட்டது.

8. ட்ரோன்கள், ரேடார்கள் உள்பட 67,000 கோடி மதிப்பிலான ராணுவ உபகணங்களை கொள்முதல் செய்யும் இட்டத்துக்கு இந்தியா ஒப்புதல் அளித்தது. இந்தியாவின் ராணுவ வலிமையை மேலும் பலப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படும் இந்த கொள்முதலுக்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையிலான பாதுகாப்பு கொள்முதல் கவுன்சில் (டிஏசி) ஒப்பு தல் அளித்தது.
9. மாநில அந்தஸ்துடன் இருந்த ஜம்மு-காஷ்மீரின் கடைசி ஆளுநர் சத்யபால் மாலிக், நீண்டகால உடல்நலக் குறைவால் காலமானார்.
    i. கடந்த 2019, ஆகஸ்ட் 5-ஆம் தேதி ஜம்மு-காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டு, இரு யூனியன் பிரதேசங்களாக (ஜம்மு-காஷ்மீர், லடாக்) பிரிக்கப்பட்டது. அப்போது, ஆளுநர் என்ற அடிப்படையில் மேற்பார்வைப் பணியில் ஈடுபட்டவர் சத்யபால்.